செய்தி வெளியீடு எண்: 294 நாள்: 24/5/11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - **24.05.2011**

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுக்கா, நீலகிரி வடக்கு வன வட்டம், கொணவக்கரை கிராமம் என்னும் இடத்தில் திரு. மாரி என்பவருடைய மகன் எம். சின்னன் 22.05.2011 அன்று காட்டு யானை தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து மிகவும் துயருற்றேன்.

சின்னன் அவர்களை இழந்து வாடும் திரு. மாரி குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சின்னன் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளதுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மேலும் ஒரு லட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்